செ.வெ.எண்:41 நாள்:19.08.2019

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

2019-20 –ம் கல்வியாண்டில் B.E., B.Tech, BDS, M.B.B.S., B.Ed, BBA, BCA, B.Pharm, B.Sc Nursing, BPT, LLB, MCA, MBA, B.V.Sc., B.SC. Agri, B.B.M., B.Sc. Bio Tech., B.F.Sc., B.Arch. போன்ற ஏனைய பல தொழிற்கல்வி பயில கல்லூரிகளில் சேர்ந்துள்ள முதல் ஆண்டு பயிலும் முன்னாள் படைவீரர்களின் மகன், மகளுக்கு மாண்புமிகு பிரதம மந்திரியின் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக பூர்த்திசெய்து உரிய இணைப்புகளுடன் online-ல் அனுப்பி வைக்குமாறு புதுதில்லியிலுள்ள மைய முப்படைவீரர் வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க வேண்டிய இணைய தள முகவரி:***<u>www.ksb.gov.in</u>***.

2019-2020 ஆண்டில் பாரத பிரதமரின் **கல்வி உதவித்தொகை** உயர்த்தப்பட்டு முன்னாள் படைவீரர்களின் **பெண் வாரிசுகளுக்கு** பிரதி மாதம் ரூ.3000/- **(ரூ36,000/- ஆண்டுக்கு) ஆண் வாரிசுகளுக்கு** பிரதி மாதம் ரூ.2500/- **(ரூ30,000/- ஆண்டுக்கு)** வழங்கப்படுகிறது. இவ்விண்ணப்பத்தினை ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க இயலும். 2019-2020 ஆண்டில் முதல் ஆண்டு தொழிற்கல்வி பயிலும் முன்னாள் படைவீரர்களின் வாரிசுகளுக்கு மட்டுமேயானது. ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள்:15.11.2019 ஆகும்.

எனவே, தொழிற்கல்வி பயில்வதற்கு தங்களது மகன் / மகள்களை 2019-20 கல்வியாண்டில் கல்லூரியில் சேர்ந்துள்ள கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் அதிக அளவில் விண்ணப்பித்து பயன் பெறுமாறும், மேலும் விவரங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளமாறும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**